# கொத்மலே பிரதேச சபை
# நுவரெலியா மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 19 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜுலை 11 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொத்மலே பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களது பெறுமதி ரூபா 32,834,235 ஆகும். அது ரூபா 33,963,252 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான காணி மற்றும் கட்டிடக் கணக்கினது மீதியும் மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கினது மீதியும் நிதிசார் கூற்றுக்களில் ரூபா 1,129,017 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதிய மீதி ரூபா 9,999,511 ஆகும். அது ரூபா 8,212,425 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் அக்கடன் மீதி நிதிசார் கூற்றுக்களில் ரூபா 1,787,086 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது முற்பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 445,549 நிதிசார் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டினது வைப்புக்கான பெறுவனவுகள் மற்றும் வைப்புக்கான கொடுப்பனவுகள் முறையே ரூபா 2,340,046 மற்றும் 1,293,048 என்பனவாகும். எனினும், அது ரூபா 521,608 மற்றும் ரூபா 472,355 எனக் கட்டுப்பாட்டுக் கணக்கில் கணக்கிலிடப்பட்டமையால் வைப்புக் கணக்கு மீதி நிதிசார் கூற்றுக்களில் ரூபா 1,064,449 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பண வருவாய் ரூபா 1,205,333 ஆகும். அது ரூபா 752,650 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் வருவாயும் நடைமுறைச் சொத்தும் நிதிசார் கூற்றுக்களில் ரூபா 452,683 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

**(அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2013 மே 03 ஆந் திகதியளவில் 3 கணக்காய்வு ஐய வினாக்களுப் பதில் வழங்கப்படாதிருந்தன.

**(ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 49,289,066 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,536,147 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வருவாய் ரூபா 4,756,425 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா ô 0 0 0 | ரூபா 000 |
| (i) | தீர்வையும் வரியும் | 3,802 | 2,602 | 1,200 |
| (ii) | குத்தகை வாடகை | 269 | 40 | 229 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,706 | 2,706 | - |
| (iv) | பிற வருவாய் | 1,336 | 480 | 856 |

### 2.2.2 குத்தகை வாடகை

(அ) சபைக்குச் சொந்தமான 2 தேயிலைக் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தபோதும் அவற்றிற்குரிய கோவை ஒன்று பேணப்படவில்லை. 2011 ஆம் ஆண்டு தொடக்கம் விலைப்பட்டியல் வழங்கப்படவுமில்லை அறவீடு எதுவும் மேற்கொள்ளப்படவுமில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான கட்டுக்கித்துலவில் அமைந்துள்ள 3 கடைகள் எதுவித உடன்படிக்கையுமின்றி குத்தகைக்கு வழங்கங்கப்பட்டிருந்தன. 2006 டிசெம்பரின் பின்னர் குத்தகை வருவாய் எதனையும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 152 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், சில வியாபாரப் புரள்வுகளின் பிரகாரம் அனுமதிப் பத்திரக் கட்டணம் போதுமானவாறு அமையவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரம்பொடை அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வியாபாரங்களிலிருந்து வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 93,350 அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய குத்தகைத் தொகை தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப் பணம் | 1,205,333 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,078,970 |

### 2.3 தண்டப் பணம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பானவர்களுக்கு எதிராக முன்னைய ஆண்டின்போது என்னால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 0.128 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.4 சொத்து முகாமைத்துவம்

### 2.4.1 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதிக வளங்கள்

பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறுமிருந்த பௌதிக வளங்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது புலனாகிய விடயங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான் அம்புலன்சு 2010 ஜூலை முதல் பயனற்றிருந்தது.

(ஆ) மத்திய மாகாண முதலமைச்சரின் நன்கொடையாகிய RW ï 5894 எனும் டிறக்டரின் டிரெய்லர் பயணத்தில் ஈடுபடுத்தப்படுவதற்கான டிறக்டர் இன்மையால் பல்வேறு காலநிலை மாற்றங்களுக்கும் இலக்காகிய வண்ணம் அலுவலக வளாகத்தில் அது தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான 6 அரசாங்க வீடுகள் பயன்படுத்தப்படாதிருந்தன அதில் பல்தெனிய உப அலுவலகத்திற்குரிய வீடு உடைந்து விழும் தறுவாயிலிருந்தது.

(ஈ) மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் ரூபா 607,617 செலவழித்து நெனபியச செயற்திட்டத்தை அமுலாக்குவதங்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தபோதும் உரிய வேலைக்கு அவற்றைப் பயன்படுத்தாதும் எதுவித தேவைகளுக்கு உபகரணங்களைப் பயன்படுத்தப்படாதும் சபையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

## 2.5 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டவற்றிற்கு முரணாக சபையால் ரூபா 58,720 செலவழிக்கப்பட்டிருந்தது.

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபை வாகனங்களை வாடகைக்கு பெறும்போது போட்டியுடனான கூறு விலைகளைக் கோராதும் பயணஞ் செய்யும் தூரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யாமலும் நாளொன்றுக்கு ரூபா 5,000 வீதம் ரூபா 535,000 கொடுப்பனவு செய்து வாகனங்களை வாடகைக்குப் பெற்றிருந்தது. பயனத்துடன் தொடர்புடைய ஓட்ட அட்டவணைக் குறிப்புகளும் பேணப்படவில்லை.

## 2.7 ஒப்பந்த நிர்வாகம்

### டன்சினன் தொழிற்சாலையின் ஒரு பகுதிக்கான பாதையைத் திருத்தஞ் செய்தல்

(அ) மேற்படி வேலைக்கு ரூபா 404,270 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதில் நிறைவேறாத 2 வேலை விடயங்களுக்கும் ரூபா 42,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. என 2013 பெப்ரவரி 21 ஆந் திகதிய நேரடிப் பரீசீலனையின்போது புலனாகியது.

(ஆ) வீதியின் மேற்பகுதியைத் தயாரிக்கையில் பொலித்தீன் மற்றும் அகண்ட இணைப்புகள் என்பவற்றினது பயன்பாட்டினை மதிப்பிடும் விலைப்பட்டியலும் தயாரிக்கப்பட்டிருந்தபோதும் குறித்த அகண்ட இணைப்புகளும் பொலித்தீனும் பயன்படுத்தப்படவில்லை.

## 2.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபையின் கழிவுகளைக் கொட்டி அவற்றை மண்ணால் நிரப்பி மூடிவிடுவதற்கு மீளாய்வாண்டின் 2 சந்தர்ப்பங்களில் ரூபா 340,695 செலவிடப்பட்டிருந்தது. இவ்வாறு அவ்வப்போது பெருமளவு செலவில் முறையற்றவாறு சுற்றாடலுக்குத் தீங்கு

விளைவித்தவாறு கழிவுகளை அகற்றியவாறிருந்ததுடன் முன்னுரிமைப் பணியான கழிவு முகாமைத்துவச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்குச் சபை கவனஞ் செலுத்தவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) ஊழியர் கடன் கட்டுப்பாடு

A/Y